# ஆத்மஜோதி



## பொருளடக்கம்.


| | |
|---|---|
| சுத்தசுதந்திரசமரசதோத்திரம் திரு. வி. க .. | 97 |
| புதுயுக அழைப்பு சுத்தானந்தர் | 98 |
| தர்மராஜ்யம் ஆசிரியர் ... | 99 |
| ராமநாமம் காந்தியடிகள் .. | 103 |
| திருக்கேதீச்சரம் —பண்டிதா. கவரத்தினம் .. | 104 |
| ஆத்மஜோதி ஐ எல். எம் எம் . | 105 |
| அறிவாகி அன்பாயிரு —சுத்தானந்தர் .. | 107 |
| நன்மைத்துணுக்குகள் உமா | 110 |
| இறைவன் ஆலயம் —செல்வி வே. பாக்கியம் . | 112 |
| மானிடனே சிந்தித்துப்பார் —தமிழ்வேள் | 115 |
| ஆத்மசித்திபெறுவதற்கேற்றவழி ஸ்ரீசுந்தரம்மாள் ராகவாசாரி | 116 |
| கடவுள்சக்தி —சிவலிங்கராயனார் .. | 118 |
| செந்தமிழ்கண்டசெம்பொருள் | 122 |
| திருக்கேதீச்சர .. சபை ... | 126 |
| திருக்கேதீச்சரயாத்திரை .. | 127 |
| செய்தித்திரட்டு ... | |




# ஆத்ம ஜோதி.


ஓர் ஆத்மீக மாதவெளியீடு.

கௌரவ ஆசிரியர்:
க. இராமசந்திரன்

பதிப்பாசிரியர்:
நா. முத்தையா

சந்தா விபரம்
ஆயுள்சந்தா ரூபா 75/-
வருடசந்தா ரூபா 3/-
தனிப்பிரதி சதம் 30;

விலாசம்
"ஆத்மஜோதி" நிலயம்
நாவலப்பிட்டி, இலங்கை.




ஓம்

# ஆத்ம ஜோதி.

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே" —சுத்தானந்தர்.


சோதி 2 || விரோதிஹு மாசிமீ || சுடர் 4


## சுத்த சுதந்திர சமரச தோத்திரம்.

சாதிநிற மொழிநாடு சமயவெறிச்
சண்டையெலாந் தாண்டித் தாண்டி
நீதியிலே விளங்குகின்ற நின்மலமாய்
நித்தியமாய் நிறைவாய் அந்தமே
ஆதிநடு வில்லாத அகண்டிதமாய்
ஆனந்த அறிவாய் நின்று
போதலொடு வரவற்ற பூரணமே
சுதந்திரமே போற்றி போற்றி.

—திரு. வி. க.

உடலமே கோயிலாக உள்ளத்தான் கடவுளாகத்
திடமன மிருக்கையாகத் தியானமே விளக்கமாகச்
சுடர்மலரன்பேயாக நிவேதனந் தூயவாழ்வாய்த்
தடம்புவி மகிழவேண்டிச் சதாகாலம் பூசைசெய்வோம்.

சு. பா.

மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலாம் நீங்கித் துணிந்துளத்தே-ஏக்கம் விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீர் இந்நாள். இராமலிங்கசுவாமிகள்.

# புதுயுக அழைப்பு.

இராகம்: பேஹாக்] [ஆதி தாளம்.

(கிளிக்கண்ணிபோல)

மானிட வாழ்வினிலே
வானமு தம்பொழியும்
ஆனந்தப் பண்ணொலிப்பாய்——குயிலே
அன்பான கண்மணியே.

தக்கத் திகெனத்திசை
தாளம் தெறித்தொலிக்கக்
குக்கூ எனக் கூவுவாய்—குயிலே
குவலயத் தோட்டத்திலே.

பூரண உலகினிலே
பூரண ராய் நர
நாரண ராய் வாழலாம்——குயிலே
நமனையும் வென்றிடலாம்.

யோகத் திலேசிவ
போகந் தெளிந்திடினே
தாகந் தணியுமடி—குயிலே
சக்திக் கலைமுதால்.

மங்கள யாழிசையாய்
வாழ்வுக் கலைகளெலலாம்
பொங்கும் புதுயுகத்தைக்—குயிலே
போற்றி யழைத்திடுவோம்.

மதங்களின் கூச்சலின்றி
மவுனச் சுடர்வெளியில்
சுதந்தர மாய்ப்பாடுவோம்—என்றும்
சுத்தா னந்தக்குயிலே!

—சுத்தானந்தர்,

# தர்ம ராஜ்யம்

(ஆசிரியர்)

சரித்திர கால வெல்லைக்குள் வருவதாக நவீன ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் இந்தியாவின் வரலாற்றில், கலிங்கப் போரில் மாண்ட ஒரு லட்சம் மக்களின் பிணக்குவியலைக்கண்டு நெஞ்சடைந்து, மனந்திருந்தி, பகவான் புத்தரின் பக்தராகி, அவர் தர்மத்தையும் அஹிம்சா மார்க்கத்தையும்உலகின் நாற்றிசையிலும் பரவச்செய்த அசோகச் சக்ரவர்த்தி விசேட இடம் பெறுகிறார். ‘நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' என்ற பழந்தமிழ் நாட்டுப் பண்புக்கிணங்க, குடிதழுவிக்கோலோச்சுங் குணம் அவரிடம் நன்கமைந்திருந்தது. பகவான் புத்தர்போதி மரத்தடியில் ஞானோதயம் பெற்றபின் சரநாத் சென்று முதலாவதாகச் செய்த ‘தர்ம பிரவர்த்தன சூத்திரம்' என்னும போதனையைக் கால வெள்ளங்கரைத்துச் செல்லாவிதத்தில் கல்லில் பொறித்து வைக்கச் செய்தவர் அவரே. மாந்தரின் உடலை வென்று மண்ணைக்கவர்தற்குப் படைத்தலைவர்களை அனுப்பி வந்த அலெக்சாந்தரின் நாட்டுக்குப் புத்தகுருமார்களை அனுப்பி மக்களின் மனத்தை வென்று அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த பெருமை அசோகரைச் சேர்ந்ததாகும். 2200 ஆண்டுகட்கு முன்னரேயே அவர் ஸ்தம்பங்களையும் ஸ்தூபிகளையும் நாடெங்கும் எழுப்பியிருந்ததினாலன்றோ இன்று புதிதாகத் தோன்றிய இந்தியக்குடியரசு தனது கொடிச்சின்னமாக அவரது தர்ம சக்கரத்தை எடுத்தாளும் பாக்கியம் பெற்று, ஓர் அரசாங்கத்தின் உண்மையான உன்னத லட்சியம் எப்படியிருக்க வேண்டுமென்பதை உலகம் முழுவதற்கும் விளக்கக்கூடிய அரிய சந்தர்ப்பத்தை யடைந்துள்ளது! அண்ணல் காந்திக்கு பல்லாயிரக்கணக்கான பணச்செலவில் ஸ்தம்பங்களை ஏன் எழுப்ப வேண்டுமெனக் குதர்க்கவாதஞ் செய்வோர்க்குச் சரியான பதில் இந்த ஒரு உண்மையிலேயே அடங்கிவிட்டது.

அசோகரின் தர்ம சக்கரம் ஓர் சாதாரண வட்டமோ, தேருருளையோவன்று. தன்னை முற்றிலும் அடக்கியாண்டு, தனது ஆசை ஆணவங்களையெல்லாம் ஒடுக்கி, தன்னுள்ளத் தேசாந்தியைக்கண்ட பின்னரேயே அந்தச் சக்கரவர்த்தி இந்தச் சக்கரத்தின் சுழற்சியைப் பார்க்க ஆவலுற்றனர். அச்சுழற்சியின் தொடர்பாக இந்தியாவின் சரித்திரத்தில் ஓர் ஒப்புயர்வற்ற சகாப்தம் உதயமாயிற்றென்பதே ஆராய்ச்சியாளர் கண்ட முடிபு. புத்தர் தமது உத்தமதர்மோபதேசத்தால் உலகமக்கள் சகலரதும் உள்ளத்தைவெல்ல ஆர்வமுற்றது போலவே, அந்த உபதேசத்தின் புறச்சின்னமான இந்தச் சக்கரத்தின் சுழற்சியால் அன்பும், அஹிம்சையும், சகோதர நேயமும் உலகெங்கும் பரவின. ஜப்பானைக் கிழக்கெல்லையாகவும் எகிப்தை மேற்கெல்லையாகவும் கொண்டு பரந்து கிடந்த கண்டங்களெங்கும் இப்புத்த தர்மக்கொடிபறந்தது; உலகில் அன்று வாழ்ந்த மக்களில் முக்கால்வாசிக்குமேலானவர்கள் அதற்கு வணக்கஞ் செலுத்தினர்.

புத்தருக்குப்பின் கருணையின் திருவுருவாக விளங்கியவர் காந்தியடிகள். காந்தீயத்தின் கொள்கைகளையேகடைப்பிடிப்போமெனக் கண்ணீருடன் இரண்டாண்டுகட்குமுன் கங்கணங்கட்டி எழுந்த இந்தியப் பிரமுகர்கள் தேசீயக்கொடியின் அமைப்பு விஷயமொன்றினாலேயே புதிய அரசாங்கத்தின் உயர்ந்த லட்சியம் எதுவென்பதை உலகறியச் செய்துவிட்டனர். உலகின் வல்லரசுகளைப் பொறுத்தமட்டில் சமாதானம் என்ற சங்கதி வெறும் பேச்சளவில் மாத்திரம் உள்ளது; செயலளவில் பார்த்தால், முன்னரிலும் படுமோசமான நாசவேலையையே காட்டுகிறது. அவர்களின் விஞ்ஞானவிற்பன்னர்களின் மூளை அணுக்குண்டுப் போட்டியைத்தாண்டி, யுரானியம், கொஸ்மிக்றே, ஜலமூல சக்தி முதலியவற்றைக் கொண்டு ஒரு நொடிப்பொழுதில் ஓர் நாட்டை நாசமாக்கும் வெடிக்குண்டுகளைக் கண்டுபிடிப்பதில் முனைந்து நிற்கிறது.

"நீட்சி சொன்னவாசகத்தை
நினைத்துச் சண்டை போடடா,
ஆட்சிசெய்ய உலகை நானே
அணுவெடிகள் போடடா"



ஹிற்லர் மந்திரமே மறுபடியும் இன்றைய ஐக்கிய தேசசங்கத்தின் பாது காப்புக்குழுவைச் சேர்ந்த வல்லரசுகளால் உபதேசிக்கப்படுமோ என்ற பீதி உலகில் பரவிவருன்றது. எந்த நேரமும் யுத்தசன்னத்தராயிருப்பதே உலகில் சமாதானத்தை நிறுவுதற்குச் சரியான மார்க்கமென்னும் கொள்கை வல்லரசுகளிடம் இருக்கும்வரையில், உலகமக்கள் அச்சமின்றிக் கிலேச மற்றுவாழவே முடியாது.

நாம் வாழும் இந்த உலகமானது நாளுக்கு நாள், நிமிடத்துக்கு நிமிடம், மாறிக்கொண்டே நிலைபெறும் ஓர் நாடகமேடை. காட்சிகள் அடிக்கடி மாறலாம், ஆனால் நாடகம் நடந்துகொண்டேயிருக்கும். காலதேவியானவள் மாந்தரின் முன்னேற்றத்தைக்கருதிப் புத்தம் புதிய சமூகக் கொள்கைகளைப்பரப்பி, அவற்றை நடைமுறைக்குக் கொணர்வதற்கு வேண்டிய கிளர்ச்சிகளையும் இயக்கங்களையும் உண்டுபண்ணிய வண்ணம் இருக்கிறாள். சமயத்துறையில் எத்தனையோ மூடக்கொள்கைகள், பழைய உளுத்துப்போன பழக்கங்கள் காலவெள்ளத்தில் கரைந்துவிட்டன; எங்காவது மூலைமுடுக்கில் எஞ்சியிருப்பன கரைந்துவருகின்றன. அரசியலுலகில் சென்ற கால்நூற்றாண்டுக்குள் பல முடியரசுகள் குடியரசுகளாய் மாறிவிட்டன. தன்னலமென்ற அத்திவாரத்தில் கட்டப்பட்டிருந்த தனியுரிமைக் கோட்டை தகர்ந்துவிட்டது. சர்வசன பொது உரிமையைப் பற்றிய பேச்சையே எத்திசையிலும் கேட்கின்றோம். இப்பொதுவுடைமை யாட்சி ஒன்றே உலகில் சமாதானத்தை நிறுவக்கூடிய தெனப்பலர் எண்ணுகிறார்கள். நாம் நேரிற் காணும் பொது உடைமைக் கிளர்ச்சியில் அவ்வித லட்சியத்தைக் காணவில்லை. முடியாட்சி குடியாட்சி, ஜனநாயகம் எதுவாயினும் அடிப்படைக் கொள்கைகளாக அறமும், அன்பும், ஆன்மநேய ஒருமைப்பாடும் இருந்தாலன்றி, அதனால் உலகில் அமைதிவர மாட்டாது. எனவே, பொது உடைமை அருளுடைமையாக மாற வேண்டும். இதனையே காந்தியடிகள் ராமஇராஜ்யம் என அடிக்கடி எடுத்துவிளக்கினார். மனிதனை அடக்கி அடிமையாக்குங் கொடுமை முதலில் ஒழியவேண்டுமென்று அவர் வாழ்நாள் முழுதும் வற்புறுத்தியது அந்தஅருளாட்சிக்கு அடிகோலவேயாம். மனிதனின் மனச்சாட்சி அறவழி. அதன்படி அவன் நடந்தால் எவ்வித புறக் கட்டுப்பாடுகளுக்கும் பிறர் சட்டங்களுக்குந் தேவை இராதென வாழ்வில் விளக்கினார். வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் கோனாட்சி

யிருந்தபோதிலும், அவர் விளக்கியுள்ள அரசியல் சாஸ்திரம் பெரிதும் குடியாட்சிக் கொள்கைகளையே அடக்கியுள்ளது. அக்காலத்தில் நாட்டையாண்டது உண்மையில் கிராமப்பஞ்சாயத்துக்களே. தேசத்தின்உயிர்நாடியாய், சமுதாயவாழ்வின் வேராய், தேசசுயராச்சியத்தின் அத்திவாரமாய் இருந்தது இக்கிராமப் பஞ்சாயத்தே இருபதாம் நூற்றாண்டில் இந்தஅரிய உண்மையைப் பூரணமாயுணர்ந்தவர் காந்தியடிகள் ஒருவரே. எழு லட்சம் குடியரசுகள் இந்தியாவில்தோன்ற வேண்டுமென்று அவர் அரும்பாடு பட்டதன் பயனாகவே, சாந்தப் பெரியாராம் ராஜன்பாபு அவர்களை ஜனாதிபதியாகக் கொண்ட இந்தியக்குடியரசு சென்றமாதம் 26ந் திகதி (26-1-50) யன்று நாட்டப்பட்டது. [1947ம் ஆண்டு ஆகஸ்ற் மாசம் 15ந் திகதி இந்திய சுதந்தரம் உதயமானதும், புதுவை யோகி சுத்தானந்தரால் 'வானரசு' என்ற ஓரங்க நாடகம் எழுதப்பட்டது. 32 பக்கங்களில் தற்கால உலக நிலையைச் சரியாகப்படம் பிடித்துக் காட்டியதுடன், எதிர்கால இந்தியாவைத்தீர்க்க தரிசனத்துடன் கற்பனை செய்துள்ளார். கடைசிக் காட்சியில், காந்தியடிகளுக்குப்பின், ஜவஹர்லாலுக்கு முன் ராஜன் பாபுவை வைத்துத் திரை எழும்புகிறது. அத்திரை விழுமுன் பரமபிதா ஜகஜ்ஜோதியாகத் தோன்றுகிறார். அவரது திருவாக்கில் கீழ்க்கண்ட வசனம் மலர்கிறது:—

"பாரத சக்தியே! பரமாத்ம சக்தியே! நீயே தர்மஜோதி உனது நிலமே விண்ணரசு; பழைய ஈடனை இன்று இங்கே காண்கிறேன். என் அருள் மழை பொழிந்தது. இந்தியா சுவர்க்கவனமாகச் செழித்தோங்குக! இந்தியர் நரதேவராக வாழ்க!!"

நாடகம் முடியுமுன் தேவர்கள், மகாத்மாக்கள், சுத்தயோகிகள் வாழ்த்துகின்றனர். அவர்களுடன் நாமும் கூடி,

ஞானபூமி இந்தியாவில் நாட்டினோம் சுதந்தரம்
வானரசுவந்து இந்த மானிலம் மகிழவே!
பரமசக்தி ஆடுகின்ற பாரத நன்னாட்டிலே
வரமிகுந்த தீரர்போற்றும் வானரசு வாழ்கவே!

எனப்பாடிக்கூத்தாடுவோம்.

———



# ராம நாமம்.

(மஹாத்மா காந்தியடிகள் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு.)

4ம்—அத்தியாயம்.

## ராமநாமமும் தேசசேவையும்.

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லால்
நலமில னொடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே"

வினா:—தேசத்தொண்டில் ஈடுபடாமல் ராமநாம உச்சாடணத்தால் மாத்திரமே, எவராவது ஆத்ம ஈடேற்றமுற முடியுமா? வீட்டுவேலைகளைக் கவனித்துக் கொண்டு இடையிடையே வறியோர்க்கிரங்கி வாழ்தல் மட்டும்போது மென்ற என் சகோதரிகள் கொள்கையே இவ்வினாவுக்குக்காரணமாகும்.

விடை:-மங்கையரை மட்டுமல்லப்பல ஆடவர்களையும் இவ்வினா திகைக்கிவிட்டது. என்னையும் கூடுதலாகத்தாக்கியிருக்கிறது. எவ்வித முயற்சியுமில்லாதிருக்கும் வண்ணம் வாதிக்கும் தத்துவார்த்திகளையும், யான் அறிவேன். அதையான் விரும்பிலன். ஒருவரது வளர்ச்சிக்கு முயற்சி இன்றியமையாதது என்பது என் தாழ்மையான எண்ணம்; அதுபலன் கருதாததாக விருக்கவேண்டும். ராமநாமமோ, அல்லது அதற்குச்சமமான வேறு இறைநாமமோ தனி உச்சாடணத்துக்கன்றி முயற்சிக்குத் துணையாய் அகச்சுத்திக்கும் தெய்வீக தொடர்புக்கும் மிகவேண்டற்பாலது. ஆகவே அஃது முயற்சிக்குப் பதிலாக என்றும் அமையாது. அஃது முயற்சியை ஊக்கவும் நேராக வழிப்படுத்தவும் உதவுகின்றது. முயற்சியெல்லாம் வீணாகுமாயின் குடும்பக்காரியங்களில் கவனமும் இடையிடையே வறியோர்க்கிரங்கவும் வேண்டியதில்லையே? இம்முயற்சியினுள்ளேயே தேசத்தொண்டு அரும்புவதை யாரும் உணரலாம். பற்றற்றுக் குடும்பத்தைப்பாது காத்தலும் சமூகசேவையும் ஒன்றென்பதே என்கொள்கை. ஏனெனில் பற்றற்ற குடும்ப பரிபாலனம் ஒருவரைக் கட்டாயமாகச் சமூக சேவையினுள் செலுத்திவிடுகின்றது. சங்கடமானசமயங்களில் மனத்தைத்தளரவும் குழம்பவும் விடாது, மனத்துறவையும், கொடுப்பது ராமநாமமே. தரித்திரருடன் தன்னைத்தாழ்த்தி அன்னார்க்குச் சேவை செய்யாதவிடத்து, ஆத்ம ஈடேற்ற முற முடியாது என்பது என் எண்ணம்.

# திருக்கேதீச்சரம்.

(பண்டிதர் நவரத்தினம்)

### விநாயகர் வணக்கம்.

கைய தைந்துக் களிற்றின் கழலிணை
உய்ய வொன்றி உனும்மடி யாரிடம்
பொய்ய கன்றுமெய்ஞ் ஞானம் பொலிதரும்
வையம் வானமும் வாழ்த்தி வணங்குமே

### சரஸ்வதி வணக்கம்

சொல்லும் பொருளும் பயனுஞ் சுவைத்தேனும்
வெல்லும் படிவாணி மேவுவளே—தொல்வினையைச்
சீக்குஞ் சரத்தோனைக் கேதீச் சரத்தோனைத்
தாக்குந் தொடைக்கே துணி

### திருக்கேதீசுவரன்

ஆதீச்சுரன் அறியாவரி அயனுந்தேடிக் காணு
சோதீசுடர்ப் பிறையுங்கெழு நீருந்தலை ஆடி
மாதீச்வர ரூபத்தோடு மன்னிச்சிவம் பொலியும்
கேதீச்சர மென்னிலிரு வினையுமோடிக் கெடுமே

ஏங்குந்திரை பிறையென்பொடு எரிதோலாமை யரவம்
தாங்குஞ்சிவ பெருமானுறை கேதீச்சரக் கோயில்
வாங்கும்முள வன்பின்முறை வருவார்வலங் கொண்டு
தீங்குந்தினி நோயும்முடன் தெரியாவகை தெறுமே

துவட்டாதொழு தேத்திச்சுதன் தோற்றுமருன் பெற்றான்
தெவிட்டாதொரு தேன்போலருள் தென்னிக்கரை புரளும்
உவட்டாத்திரு மறைபாடிய உய்ந்தார்பிள்ளை தோழன்
குவட்டாற்புனை கோயிற்றிருக் கேதீச்சரத்தானே

பற்றும்வினை பற்றறப்படப் பற்றியருள் பரப்பி
முற்றும்பவம் முற்றுதென்னுள் முன்னேயெழுந் தருளப்
பெற்றும்பிறர் பெற்றாரெவர் பேறென்றிறு மாக்கேன்
சுற்றும்சுடர் சோதிச்சடைத் துவட்டாபுரத் தானே





# ஆத்மஜோதி.

—"ஐ. எல். எம். எம்."

மனிதன் எத்தனையோ அற்புதங்களைச் சாதித்துவிடுகிறான். மேலும், சரீரத்தினுள் எத்தனை நரம்புகள் இருக்கின்றன; எத்தனை தசைகள் இருக்கின்றன; எத்தனை எலும்புகள் இருக்கின்றன; இதயக்கமலத்தின் செயல்என்ன? சீரணக்கருவி எப்படி வேலை செய்கிறது? என்பனபோன்ற சரீரமர்ம சாத்திரங்களையெல்லாம் மனிதன்கண்டுபிடித்து, உலகத்துக்கு விளம்பரப்படுத்திவிடுகிறான்.

ஆனால், அவனுடைய சரீரக்கருவியையும், அங்க அவயவங்களையும், அறிவுஎன்னும்புத்தி சுவாதீனத்தையும் இயங்கவைக்கும் அற்புதசக்தியொன்று அவனையுங்கடந்து, அவனுடைய அந்தரங்கத்திலே இருந்து ஆட்சி புரிந்துகொண்டிருக்கிறதே, அதுதான் ஆத்மா, அல்லது உயிர். அந்த அற்புதசக்தியை மனிதனால் அறிந்துகொள்ள முடியவில்லையே! இந்தஅற்புதத்தை மனிதன் சுயமே ஒவ்வொருவனும் பகுத்துணர்ந்துகொள்வதென்பது அசாத்தியம்.

உயிர் என்பது என்ன? உடலில் உயிர்எப்படி இயங்குகிறது? உடலில் உயிர் எவ்வளவுகாலம் தங்கியிருக்கும்? எப்போது அது வெளிப்பட்டுப்போய்விடும்? அது எங்குபோய்ச் சேருகின்றது? இந்த உயிருக்கு அதிபதி யார்? யாரால்—எந்தச்சக்தியால் உயிர் ஆளப்படுகின்றது? போகும்உயிர் மீண்டும்ஏன் வருவதில்லை? எங்குபோய் அது அடைக்கலம் புகுகிறது? இதையெல்லாம் நமக்கு யார் அறிவுறுத்துவர்? யார்போதிப்பர்?

நாம்யார்? நாம் எங்கிருந்தோம்? நாம் எங்குவந்தோம்? நாம் எங்குசெல்வோம்? நம் இலட்சியமென்ன? நாம் செய்வதென்ன?

நாம் ஏன் பிறக்கிறோம்? நாம் பிறந்தபின் ஏன் இறக்கிறோம்? நாம் இறப்பதற்காகவா பிறந்தோம்? நாம் உலகிற்கு விட்டுச்செல்வதென்ன? நாம் உலகை விட்டுப்போகும்போது எதைக் கொண்டு போகிறோம்? என்பன போன்ற பல திரிகால நிகழ்ச்சிக்குரிய கேள்விகள் அடுத்தடுத்து நம் சிந்தனைப்பீடமாகிய மூளையில் உதிக்கின்றன. இதற்கு விடை காண்கின்றோமா? இதை ஆராய்கின்றோமா? ஆராய நமக்கு அவகாசம் கிடைக்கின்றதா?

அத்தகைய ஞான ஆத்மார்த்த போதகர், அவ்வப்போது "ஒரு மறைந்த சக்தியால்" அந்தந்த நாட்டுக்கு அந்தந்தக்காலத்துக்கேற்ற: இராமானுஜர், சங்கரர், புத்தர், கிறிஸ்து, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்; மஹான் முஹம்மத், போன்ற சீர்திருத்த சீலர்கள் அனுப்பப்பட்டு வந்தனர்—வருகின்றனர். எல்லா உயிர்களும் யாரிடம்போய் இறுதியடைக்கலம் புகுகிறதோ அந்தச்சக்தியை நாம் கடவுள் என்கின்றோம். உயிர் சம்பந்தமான ஞானங்களை—ஆத்மார்த்தங்களை—நமக்குப் போதிப்பதற்காக அந்த இறைவனால் அருளப்பட்டு-அனுப்பப்படும் ஆசானை நாம் அவதார புருடர் என்றும், சீர்திருத்தஞானி என்றும், தீர்க்கதரிசிகள் என்றும் அழைக்கின்றோம்; உலகம் தோன்றிய காலந்தொட்டு இதுகாறும் லட்சக்கணக்கான தீர்க்கதரிசிகள் தோன்றிப்போந்தார்கள் என்பது இதிகாசக்கூற்று.

இத்தகைய சீரும் சிறப்பும் பொருந்திய போதகாசிரியர்களின் பொறுக்குமணி மொழிகளைத்தாங்கி மாதாந்தம் தவறாது, நம் "ஆத்மஜோதி" ச்சுடர்கள் அள்ளி வீசுகின்றன வென்பது மறுக்கொணா உண்மை! அச்சுடர்களின் வளர்ச்சிக்கு அன்பர்கள் ஆதரவு நல்குவது கட்டாயக்கடமை!! எனவே நாம் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேர்வதோடு இன்னுமொரு அன்பரைச் சேர்த்துக் கொள்வோமாக!!! வாழ்க ஆத்மஜோதி! பெருகுக அதன் வாசக அன்பர்!!



# அறிவாகி அன்பாயிரு

(சுத்தானந்தர்)

என்வாழ்வின் பெரியபாக்கியம்இது; ஒன்பதுவயதில் என்னை ஆண்ட குருநாதன் பரமஞானி பன்னிரண்டாண்டுகளுக்குப்பிறகு காட்சியளித்தார். அதற்குள் எத்தனைமாறுதல்கள்; காலத்தேர் எத்தனை மேடுபள்ளங்களில் இறங்கித்தத்தளித்தது. காணமுடியாது என்றமகானைக்கண்டேன் நான் வாழ்வில்பதினாயிரம் பேரை பார்த்திருக்கிறேன். இந்த ஒருசாதுசெய்தஉதவி எனக்கு யார்செய்யமுடியும்! விவேகானந்தருக்குப் பரமஹம்சர் வாய்த்தது போல், இந்தமகான் எனக்கு வாய்த்தார். இதோநான் கும்பிடுமுன் என்னை "வா வா தம்பீ, நல்லாயிரு, உட்காரு" என்றார். பார்த்தால் தெருபரதேசிபோல் தோன்றும். விளம்பரம் சிறிதும் இல்லை. யாரையும் யாசிப்பதில்லை அவதாரப்பறையடிப்பதில்லை. பத்திரிகையை எட்டிப்பார்த்ததில்லை. குருபீடமோகமில்லை. சிஷ்யவேட்டையுமில்லை தன்னந்தனியர். எப்போதும் சித்தத்தில் சிவனையுணர்ந்து தியானத்திலே லயித்தசித்தர். என்னைச்சுத்தானந்தம் ஆக்கியஞானானந்தர். அவர் வயது தெரியாது. முகத்தில் நல்லஒளி; அகத்தில் சைதன்யப்பிரகாசம். பேச்செல்லாம் சுருக்கவிளக்கமாக சூத்திரம் போலிருக்கும். முன்னரே என்னையறிந்த பரதேசியும் அங்கேயிருந்ததால்என் காரியம் எளிதாயிற்று. இவர் ஞானிக்கு எனது வரலாறுகளையெல்லாம் முன்பே சொல்லிவிட்டார். ஆதலால் பூர்வபீடிகையில்லாமல் ஞானகுரு பளிச்சென்று விஷயத்திற்கு வந்தார்.

நான்: சுவாமீ, தங்களின் தரிசனம் பேரின்பமளிக்கின்றது. என்கவலையெல்லாம் பறந்துபோனது.

ஞானி: உன்னைப்பார், என்னைப்பார்ப்பாய், உன்னைப்பார் உலகைப்பார்ப்பாய், உலகைப்பார்த்து உன்னைப்பார்க்காதே, பேரின்பம் வந்துகொண்டிருக்கிறது, ஆனால் சிக்கலில் மாட்டிக்கொள்ளாதே,

நான்: சுவாமி யார்இன்பம் என்றுஅறிந்தேன். பேரின்பமுதித்தது, சிக்கல் என்ன?

**ஞானி:** தம்பி, உன்னைச்சுற்றி ஓர்ஆசைவலை பின்னுகிறது. அந்தவலையில் சிக்காதே.

**நான்:** வலையா? சுவாமி தங்கள் அருளாலேதான் அந்த வலையைத் தப்பிப்பிழைத்தேனே........கலைதான் இப்போது நிலை.

**ஞானி:** அதைச்சொல்லவில்லைத்தம்பி. உன்னையினிப் பெண் வலையில் சிக்கவைக்க யாராலும் முடியாது. மற்றொருவலை—உலகில் புகழ்பெறவேண்டும்; அரசியல் மேடையேறித்தலைமைநடத்தவேண்டும் என்ற ஆசையிருக்கிறது. அதனால் அடிக்கடி உன்னறிவை மறக்கிறாய்; உள்ளந்தானை மறக்கிறாய். மெய்தானே?

**நான்:** மெய்தான் சாமி. மகாத்மாகாந்தியிடம் எனக்கு அளவற்றஅன்பு. அவர்வழி நடக்கத்துடிக்கிறேன். அலுவலைக் கூடவிடப்போகிறேன். நானும் சத்தியாக்கிரகம் செய்து சிறைபுக விரும்புகிறேன். கரூரில் கள்ளுக்கடைமறியல் செய்வேன். மேடையில் அதிகார வர்க்கத்தைக் கண்டிப்பேன். சிறைபுகுவேன்; புகழ்பெறுவேன்.

**ஞானி:** தம்பீ, நீ சிறைபுகமுடியாது. காந்திசேவைசரி. அந்த மகானால் நாடுவிடுபடும். அவர்கொள்கை நல்லது பின்பற்று. ஆனால் காந்திமேடை மினுக்கர் இல்லையே. அவர்பத்திரிகை விளம்பரத்திற்காகவா சிறைசென்றார்? அந்தக்கரணசுத்தியுடன் ராமசேவையாக தேசசேவைசெய்கிறார். அதேமாதிரி உனக்கொருதொண்டுஉண்டு. பாரதசக்தி எந்நிலையிலுள்ளது.

**நான்:** சாமி, அதுதான் என்வாழ்வின் பெரும்பணி. மூன்று காண்டங்கள் முடிந்தன. இன்னும் இரண்டு பாக்கி. ஆழ்ந்த யோக ரகசியங்களைச் சொல்லும் அந்தக்காண்டங்களை எழுதப்பக்குவம் வேண்டும். மேலும், என்கவிதையில் எனக்கு இன்னும் உறுதிப்பாடில்லை. படித்துக் காட்டுகிறேன் கேளுங்கள். (நான் சாதன காண்டத்தில் சிலபகுதிகள் படித்தேன்.)

**ஞானி:** வாக்கு நன்றாயிருக்கிறது. ஆனால் இன்னும் தெளிய வேண்டும். பாடிப்பாடிவைத்திரு. மீண்டும் நான்குமுறை செப்பனிட்டு உன்மனச்சாட்சி கட்டளையிடும்போது வெளியிடு. அதற்கு முன் அவசரப்படாதே. திருவருள் கூடும்போது அச்சுவாகனமே உன்னை அழைக்கும், பாரதசக்தியையறிந்துகொள்ள ஆர்வமுடன்



சில அன்பர் தாமே வருவர்: அவர்களுக்குப் பாடம் சொல்ல யோக ரகசியங்களைத்தந்து அமைதியாயிரு. அவரவர் காலத்தில் அருட்கவிகள் புகழ்பெறுவதில்லை. உன் வாக்கை உலகம் அறியக் காலம் வரும். பாரத சக்திதான் உன் ஆயுட்பணி. சன்மார்க்க சேவை செய் போதும்.

**நான்:** தேசசேவை! தமிழ், தேசம், மனிதசமுதாயம் மூன்றிலும் பாசம் போகவில்லையே.

**ஞானி:** தம்பி, நீ நீயாயிரு; அது அதுவாய் நடக்கும். அறிவாகி அன்பாயிரு. உன்னறிவில் ஊன்றிக்கொள். பரம்பொருளை, சுத்தசக்தி இறைவனை தியானத்திற் கலந்திரு. கட்டளை உள்ளிருந்து வரும். அதை நிறைவேற்ற சக்தி வரும். கட்டளை நிறைவேறியதும் உள்ளே போ. உள்ளிருந்து உலகிற்குதவு. உலகில் சிக்கினால் உள்ளதும் போகும். இரு விகாரப்புயல் உன் ஜீவப்படகை மோதும். தேச பக்தி செய்; தெய்வ பக்தி செய். ஆனால் கட்சிச்சண்டைகளிலும், வகுப்பு வாதத்திலும், சுயநலப்புகழிலும், வசைச்சூறாவளியிலும், பட்டம் பதவி வேட்டையிலும் திரியும் அரசியலில் சிக்காதே. கடவுள், நீ—வேறொன்றையும் இடையில் புகவிடாதே. உலகைக்கடவுளின் கோயிலாகப் பார்; ஜனசேவையே தெய்வ சேவையெனக்கருது. உனக்கு இயல்பில்லாத சேவையில் புகாதே. உலகம் வினைக்கோயில். அதில் உனக்குரிய தொண்டைச் செய்து பலனை ஆண்டவனுக்கே அர்ப்பணஞ்செய். அவனுடன் ஐக்கியமாகக் கருது. வேறு ஆசைகள் புகுந்தால் இன்னொருபிறவி எடுக்கவரும். கவனம்.

[சுவாமிஜியின் அனுபவங்கள் அடங்கி வெளிவர இருக்கும் 'ஆத்மசோதனை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது]

# நன்மைத் துணுக்குகள்

(திருவருணை உமா எழுதியது)

1 எவனொருவன், எவ்வளவு உன்னதமான சுகபோக வாழ்க்கையிலிருப்பினும் உலக வாழ்க்கை அநித்தியமானது என உள்ளபடி உணர்கிறானோ அவனுக்கே அருளுலகம் திறக்கப்படுகிறது. அப்போதே, ஐம்புலவின்பங்களை பூர்த்தி செய்வதே குறிக்கோளாகக்கொண்டு அலைந்து அல்லற்படும் மனத்தை அடக்குவதும் ஒருவாறு சாத்தியமாகிறது.

2 இறைவனிடம் எழும் பேரன்பே காலக்கிரமத்தில் மற்றப் பற்றுகளைப் போக்கி சித்த-சுத்தியடைவித்து மனவடக்கத்தை முற்றுவிக்கிறது. அலையும் மனத்தால் உள்ளத்துறையும் இறைவனை ஒருபோதும் காணொணாது.

3 கண்கள் இறைவனையே காணட்டும். காதுகள் அவன் பெருமையையே கேட்கட்டும். வாய் அதன்புகழையே பேசட்டும். எழும் நினைவுகள் அவன் நினைவுகளிற்றிளைக்கட்டும். அவனன்பிற்கனிந்த உள்ளத்தால் ஒப்பிலா அவனையுணர்ந்து ஆனந்திப்பது திண்ணம்.

4 ஜபத்தாலும் மற்றஎம்முயற்சியாலும் அடங்காமனதுகூட இறைவனின் இன்னருளை நினைந்துகனிந்து தானாகவேதன்னிலையில் அசைவற்று நின்றுவிடுகிறது. எந்நினைவுமற்ற தியானநிலை சுலபமாகக் கை கூடிவளர்கிறது.

5 தியானத்தாலன்றி மோனத்தையறிய முயற்சிப்பது வீண் முயற்சியேயாகும். புலனடக்கமும் மனவடக்கமும் தியான பலமுமே ஞானத்திற்கு வழி.

6 புலனடக்கம் மனவடக்கத்திற்கும் மனவடக்கம் புலனடக்கத்திற்கும் பரஸ்பரம் உதவியாகி அவை, தியானத்திற்கு ஒருவனை சித்தமாக்கி விடுகின்றன. பக்திப்பெருக்கில் வலுத்து முதிர்ந்த



தியான நிலையில், அத்தியான நிலையே தன் சொரூப நிலையென உணர்ந்து அனுபவியாகிறான்.

7 யாவற்றிற்கும் சாட்சி மாத்திரமாகத்தன்னுள் விளங்கும் சுத்த அறிவே, அன்பிற்குரிய லட்சியப் பொருளாம் இறைவனுரு எனவும், அதுவே தன் சொரூப நிலை எனவும் அறிந்தவனுக்கே தூய அருளனுபவம் சித்திக்கின்றது.

8 அருளனுபத்தில் ஒன்றுபட்டு நிலைத்தமனம், தன்னகந்தைக்குணம் மாறி, தூய்மையும் நுண்மையும் பெற்றுத்தன் உண்மையில் ஒன்றி நிற்கத் தகுதியுள்ளதாகிறது.

9 அன்பின் அளவே அருளின் வளமும். பற்றற்ற மனமின்றிப் பூரண பக்தி செலுத்த முடியாது. மின்னெனத்தோன்றி மறையும் உலக சுகபோக வெறுப்பே, இறைவன்பால் மட்டற்ற விருப்பை உண்டுபண்ணி உலவாவின்ப நாட்டத்தில் மனிதனை ஊக்கி விடுகிறது.

10 இன்பம்போல் தோன்றும் துன்பச் சுமையைச் சுமந்து அலுத்து ஓய்ந்த மனமே, இவ்வுலக வாழ்க்கையின் ரகசியத்தை உள்ளபடி உணர்ந்து வெறுத்து இறைவன் பால் திரும்ப விழிப்படைகின்றது. இவ்விழிப்பேற்பட்ட பின் உலக வாழ்க்கை அவனுக்கு முன்போல் உவப்பூட்டாது.

11 வீண் ஆசைகளும் வீண் எண்ணங்களும் வாணாளை வீணாக்கியதே என வருந்தி செய்வகையறியாது திகைக்கும் செயலற்று ஓய்ந்த மனத்தில் இறைவன் அருள் விதையை ஊன்றி விடுகிறான். மருளுலக இருளில் மயங்கி வரண்ட அவனுள்ளத்தில் இறைவன்பால் அன்பெனும் இன்ப வூற்றுப்பெருகி அருளை வளர்த்து அனுபவிக்கச் செய்கிறது.

12 துன்பம் துன்பம் எனமனமுவக்கா நிலைமையை நாம் வெறுக்கிறோமே தவிர, "துன்பம் என்பது யாது, அது ஏன் வருகிறது; அதன் தன்மைதான் என்ன." என்பதை அறிந்துகொள்வதில்லை. சிறிது அமைதியாக ஆராய்ச்சி செய்தால் அது இறைவன் அனுக்கிரகத்தின் மறைமுகச் செயலே என்றும், அது நம்

# இறைவன் ஆலயம்.

(செல்வி. வே. பாக்கியம்)

இப்பிரபஞ்சம் எங்கணும் சர்வவியாபகனாய், பரிபூரணனாய், நிர்மலனாய், நித்தியனாய் நிறைந்திருப்பவன் இறைவன். எல்லா உயிர்களிலும், எல்லா உருவங்களிலும், எல்லாப் பொருட்களிலும், எவ்விடத்தும் எப்பொழுதும் மேன்மையோடிலங்குபவன் இறைவன். அவனி முழுதும் அருட்ஜோதியாய் ஒளிர்பவன் இறைவன். மெய்யன்பரதும் உதவியற்றோரதும் உண்மை அன்பன் இறைவன். சகல ஜீவாத்மாக்களினதும் ஒப்பற்ற தந்தை இறைவன். ஜீவாத்மாக்கள் யாவும் இறைவனின் அன்புக் குழந்தைகள். இறைவனின் அங்கங்கள்.

---

முற்பக்கத்தொடர்ச்சி

புத்தியை விளக்கும் பொருட்டே இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஓர் மனோநிலை என்றும், அது நிவர்த்திக்க முடியாத இயற்கை சக்தியன்றென்றும் விளங்கும்:

13 துன்பம் முதிரா விடத்து இன்பத்தேட்டத்தில் தீவிர முதிப்பதில்லை. துன்பமென்னும் ஆசானே, மனத்தின் அகந்தைத் துடிப்பினை யகற்றி இறைவன் கருணையில் அமைதியுற தீவிர தாபத்தை யுண்டாக்கிப் பக்குவப்படுத்தி விடுகிறான், பயங்கரக் கனவு சீக்கிரம் கலைவதும் இன்பக்கனவு நீடிப்பதும் போல் துன்பமற்ற நிலையில் இறைவனைக்காண அவாவும் விழிப்பும் ஏற்படுவதில்லை,

14 எண்ணங்களால் நிறைந்து எண்ணங்களின் நடுவில் வாழ்ந்து எண்ணங்களின் சுமையோடுமாண்டு போகிறான் மனிதன். வீணான எண்ணங்களால் அவனடைந்த நன்மை என்ன? தன்னெண்ணத்தினால் ஆவதொன்றுமில்லை யெனவும், எது எது எப்படி எப்படி நடக்கவேண்டுமோ அது அது அப்படியப்படியே இறைவனது ஆணையால் நேரிடுகின்றதெனவும், அறிந்து தெளிந்த மனமுள்ளவன் வீண்எண்ணங்களால் அலைவுறான்.



இறைவன் அளித்த பெருநிதி இம்மனிதப்பிறவி. இம்மனிதப் பிறவியை இறைவன் அருளியது ஏன்? "ஆத்மாவானது தன் பரிபூரண அன்பைப் பெற்று என்றும் அழிவில்லா நித்திய உண்மைப் பேறாகிய வீட்டுப்பேற்றை அடைதற்கேயாம்.

இறைவனின் பரிபூரண அன்பைப்பெற மாந்தர் ஆற்றும் முயற்சிகள் பல. மெய்யன்பர்கள் தம்மையும் தமதுடைமையையும் இறைவன் ஒருவனுக்கே அர்ப்பணம் செய்தும்; யான், எனது என்னும் அகங்காரத்தை அகற்றியும்; எல்லா ஜீவாத்மாக்களிலும் இறைவன் இலங்குகின்றான் என்னும் உண்மையை மேற்கொண்டும்; தம்முயிர்போல் மன்னுயிர்களை எண்ணியும்; தவவிரதங்களைக் கைக்கொண்டும்; இறைவனுக்குப் பிரீதியான வழியில் நின்று, இறைவன் அருளைப் பெறுகின்றனர். மற்றையோர் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்பவராகின்றனர்.

இவர்கள் கடவுளை நினைத்துக்கடும் விரதங்களைக் கைக்கொள்கின்றனராம்; இறைவனை வணங்கி அவனருள் பெறுவதற்காக ஆசார சீலராய் ஆலயத்திற்குச் செல்கின்றனராம். அவ்விதம் செல்லும்போது உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி, வாடி வருந்தும் ஏழை ஒருவன் முற்பட்டுவிட்டால் தம் ஆசாரமெல்லாம் அகன்று விடுமென எண்ணி; ஏழைமீது வெறுப்புற்று அடங்கி ஒடுங்குகின்றனர். இதுமட்டுமா? இறைவனைத் தரிசனம் செய்யச் செல்லும் சமயத்தில அபசகுனமாம் என எண்ணி ஏழைமேல் கோபிக்கின்றனர். ஆனால் இறைவன் இவ்வேழைபால் இலங்குகின்றான்; தாங்கள் "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென்பதைச் சிந்திக்கின்றார்களா? தம்மைப்போல் இவனும் இறைவனின் குழந்தை இறைவனின் அன்பிற்குப் பாத்திரமானவன் என்பதை அறிகிறார்களா? என்னே! இவர்கள் விரதமும் வழிபாடும்.

பரிசுத்தராகிய இறைவன் என்னசெய்தார். மிருகங்களுள் இழிவான பன்றிக்குட்டிகள்மேல் இரங்கி, தாய்ப்பன்றியாய் உருவெடுத்து அக்குட்டிகள் தம் ஒப்பற்ற தூய திருமேனிமீது தீண்டும்படி செய்தார். இதனால் இறைவன் பரிசுத்தமில்லாதவன் எனக்கூறமுடியுமா? இறைவனுக்கு எவ்வுயிரும் ஒரே தன்மையானது. உயர்ந்ததென்றும் இழிவானதென்றும் ஒன்றில்லை.

உண்மையான இறைவனின் அன்பிற்குப்பாத்திரமான மெய்யன்பர்களுக்கு இவ்வேழையே இறைவன் ஆலயமாகும். ஏழையின் கண்களே ஜெகசோதியாகும்.

"தானமேதவமதாகும் தரணியிலீடுமில்லை
வானமும் வையங்காண்பாய் வழங்கி நீ வாழ்வையாயின்
கூனுடைக்கிழமே தெய்வம் கொடும்பசியுற்றோர் தெய்வம்
ஏனிதை யறிதலின்றி ஆலயம் இரந்து நிற்பாய்."

இறைவனின் மெய்யன்பர்களும் இறைவன் அமரும் ஆலயமாகும். உண்மையன்பர் ஒவ்வொருவரினதும் அகத்தே மலரில் மணம் போலவும், மணியுள் ஒளிபோலவும். விளங்குகின்றான். அடியார் அகத்தில் குடி கொண்டுள்ளான். அடியாராகிய மணிவாசகனாரும்

"அடியாருள்ளத் தன்புமீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையும்" என்றும்
"விரும்பும் அடியாருள்ளத்துள்ளாய்" என்றும்
"தெருளிடத்தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே! சிவபெருமானே!" என்றும்

இறைவன் அன்பருள்ளத் தமர்ந்துறையும் ஆற்றலை எடுத்தோதுகின்றனர். தன் அடியாருள்ளத்தில் அன்பு மேலீட்டுடன் குடியாயிருக்கின்றானும் இறைவன். என்னே! இதனை அப்பர் சுவாமிகளும்

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்றும்
"நகமெலாந்தேயக் கையாணுண்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர்மல்க முன்பணிந்தேத்தும் தொண்டர்
சகமலாற் கோயிலில்லை" என்றும்
"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்றும்

கூறுகின்றனர். அங்கமெல்லாம் அழுகி நிறைந்த நோயுடையவராயிருந்தாலென்ன! ஆவுரித்துத் தின்றுழலும் ஈனப் பறையராயிருந்தாலென்ன! இறைவன் அன்பராகில் நாம் வணங்கும் கடவுள் அவ்வன்பரேயென்கிறார்.

மெய்யன்பர் அகத்தில் அமர்ந்து, நல்லொளி வீசி; நல்லருளாம் தண்ணமுதைப் பொழிந்து அவர்களின் அன்பனாகின்றான் இறைவன். இவ்வன்பரில் இலங்கும் இறைவனை வேறெங்கே காண முடியும்.

"கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்கு தன் குமரித்துறையாடிலென்
பொங்கு மாகடலோத நீராடிலென்
எங்குமீச னெனுதவர்க்கில்லையே."



# மானிடனே! நீயார்? சிந்தித்துப்பார்!

"தமிழவேள்"

மந்தைகளின் கூட்டத்தில் கலந்து நாளும்
மகிழ்வுடனே வாழ்ந்தவொரு குட்டிச் சிங்கம்
வந்தபெரும் பழக்கத்தால் தானும் அந்த
மாடாட்டி லொன்றெனவே கருதி வாழ
அந்தவழி வந்தவொரு சிங்க வேறிவ்
வாச்சரியந் தான்கண்டு அதனைப் பார்த்து
மைந்த! நீ வாராயென் றழைத்துச் சென்று
மன்னுமொரு நீரோடை தன்னை யண்மி

தெள்ளியவிந் நீர்நிலையில் சிறிதே யுந்தன்
திருமுகத்தை யுற்றுப்பா ரென்ன அந்தக்
கள்ளமனஞ் சிறிதில்லாச் சிங்கக்குட்டி
கருத்துடனே பார்த்துத்தன் விம்பங் கண்டு
துள்ளியெழுந் துடல்சிலிர்த்து ஓகோ! நானோர்
துங்கமட லரியேற்றின் தோன்ற லேயென்
றுள்ளவெறி யுணர்ச்சிவெளி தள்ள வானின்
ஓங்குமிடி யெனவோசை செய்த தாமே.

நரம்புதோல் எனுமிவற்றால் நன்றாய்ப் போர்த்து
நாலாறு கால்வைத்து இரண்டு கால்கொண்
டரந்தைதுயர் கொலைகளவு வஞ்ச மாகி
யாசாமி வேலைகளி லார்வங் கொண்டு
நிரந்தரமும் கிடந்துழன்று நீறாய்ப் போகும்
நிலைகெட்ட மானிடனே! நீதா னந்தப்
பரம்பொருளின் கருணையருட் பொறியென் றுன்னைப்
பார்க்கவேன் மறந்திட்டாய் சிந்தை செய்வாய்.

# ஆத்மசித்தி பெறுவதற்கேற்ற வழி.

(ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி)

பழமொழிகளிற் பல விசேஷமான தீர்க்க திருஷ்டியும், சூட்சும ஞானமும் பொலிந்து கிடப்பவை. அதன் காரணமாகவேதான் அவை பழமொழிகளெனப்பெறும். இல்லாவிடில், அவை சிதைவுற்று அழிவடைந்திருக்கும். அவைகளின்பழமையே அவைகளின் பெருமையையும் உபயோகத்தையும் குறிப்பது. ஆத்மசித்தி பெற விரும்பும் சகோதரிகளுக்கு அத்தகைய பழமொழி ஒன்றை விளக்கிக்காட்ட எண்ணியுள்ளேன். "அவசரக்காரனுக்கு (ஆத்திரக்காரனுக்கு) புத்திமட்டு", என்ற தமிழ் மூதுரையும், "அவசரம் நாசத்தைத்தரும்" [Haste Makes Waste] என்ற ஆங்கிலப் பழமொழியுமே. நாம் குறித்தவோர் இடத்திற்குப்போவதற்கு நேரான பாதை வழியே சென்றால் இடைஞ்சல், துன்பம் இல்லாது போவது சுலபம். ஆனால் குறுக்குவழியாகப்போக யத்தனிப்பதில் பற்பல இடையூறுகளைத் தாண்டிப்போக நேரலாம். அதனால் காலதாமதமாவதோடு மெய்வருத்தமும் ஏற்படக்கூடும். ஆத்மசித்தியை அடைவதிலும் இதே மாதிரி நேர்வழி ஒன்றே பயன் தருவதாகும். குறுக்கு வழிகள் பயனற்றவை. ஆபத்துக்களுக்குமிடமானவை.

உளநிலைத்தோற்றத்தினுதவியால், இந்திரியங்களுக்கெட்டாத விஷயங்களை திவ்விய திருஷ்டி கொண்டு ஆத்ம சொரூபத்தை யறிந்து கொண்டுவிடமுடியும் என்றநம்பிக்கை கூடாது. இது நேரான வழியல்ல. கோணலான குறுக்குவழி. யோகிகளுக்கு மட்டில் ஒரு சமயம் இது ஜயம் தரக்கூடிய வழி. சாதாரண ஜனங்களுக்கேற்றதல்ல. நேரான பாதை, கரடு முரடானதாகவும், மலைமேல் ஏறி இறங்க வேண்டியதாயிருப்பினும், அதையே நாடி நடப்பதே சரியான வழி. அதுதான் ஆத்மசித்தி நிலையத்தை யடைவதற்கு உண்மைக் குறுக்கு வழியுமாகும். "The longest way round is the shortest way home" என்கிற ஆங்கிலப்பழமொழியும் குறிப்பிடத்தக்கது.



திவ்விய திருஷ்டி [Clairvoyance] என்பது இந்திரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களை யுணரவல்ல சக்தியாகும். பாமர ஜனங்களுக்கு இந்திரியங்களால் நுகர்ந்து அனுபவிக்கும் இன்ப துன்பங்களின் மூலமே, தன்னயம், சுயாபிமானம் முதலிய "நான், எனது" என்ற அகங்கார மமகாரங்கள் நாளடைவில் தேய்வு அடைதல் அவசியம். ஆகவே, ஆத்மசித்தி பெறத்தேவையான சாதனங்களுள் முக்கியமானவை:—தருமசிந்தையுடன் அனைவரையும் அன்பு ஆதரவாகப் பரிபாலித்தல், [tolerance] மனது வாக்கு, காயம் இவைகளில் பரிசுத்தம், [purty] உண்மையே பேசுதல் [Truthfulness] அச்சமின்மை, [Faslessness] சுகபோகங்களில் நாளடைவில் விருத்தி [Renunciation] இவை ஐந்துமேயாம். ஸ்திரீகளாகப் பிறந்துள்ளவர்களுக்கு, இவ்வைந்து சாதனங்களும் இயற்கையில் அமைந்துள்ள குணாதிசயங்களே. ஆனால் அவைகளை அனுஷ்டித்து வருவதற்குப் பல வகைத்தான இடையூறுகள் ஏற்படக்கூடும். அவ்விடையூறுகளைப் பொருட் படுத்தாது வென்று ஜயம் பெறுதல் வெகு கடினமான காரியமன்று. மேற்கூறிய ஐந்து சாதனங்களுள் 'தரும சிந்தை' என்பது வெகு முக்கியமானது. பேதைத்தனம், துர்நீதி இவைகள் மேலிட்டு நடக்கும் தெய்வபக்தியற்ற துர்மார்க்கர்கட்கும், நல்லொழுக்கம், நீதிநெறி சீலம் வாய்ந்த நன் மக்கட்கும் உள்ள வித்தியாசம் பிற்கூறியவர்கட்குள்ள தருமசிந்தை, தயாளகுணம், மன்னிப்பும் முற்கூறியவர்களுக்குள்ள சினம், இறுமாப்பு, கபட சிந்தையுமேயாம்.

கபடம், பொறாமை, இறுமாப்பு இவைகளைத்துறந்து, நற்குணங்களைக்கடைபிடிக்கும்படி நமது சகோதர சகோதரிகளுக்குப் புத்தி புகட்டுவது வெகு அவசியம். ஆத்மசித்திக்கு மட்டுமேயன்றி, இல்லற வாழ்க்கையின் நன்மைக்குமே இது தேவை. இல்லறவாழ்க்கையில் இந்நற்குணங்கள் படிப்படியாகக் கையாளப்படவாரம்பித்தால், தானாகவே, ஆத்மஞானம் ஏற்பட்டுவிடும். பிறரிடம் வஞ்சக எண்ணமின்றி, உள்ளன்புடன் நடந்து அன்னாரது தவறுகளையும் பொறுத்து அவர்களுக்கு நற்புத்தி புகட்டுவதே தாய்மார்கள் சகோதரிகளான, நமது முதற்கடமையாகும். இத்தகைய பழக்கங்களால் நமது ஜன்மசாபல்லியம் திண்ணம். அவர்களது நல்வழிப்பாடும் உறுதியடைய வழியுண்டு. மற்றைய நான்கு சாதனங்களையும்பற்றி அடுத்த சுடரில் எடுத்துக் காட்டப்படும்.

# கடவுள் சக்தி.

[பொன்னேரி. ப. சிவலிங்க நாயனர்]

எண்ணற்ற அற்புதங்களைச் செய்யவல்ல விஞ்ஞான அறிவு மேம்பட்டிருக்கும் இக்காலத்தில்—பகுத்தறிவின் திறத்தால் வியத்தகு காரியங்கள் பலவற்றைச்சாதித்து இயற்கைச்சக்தியை மனித சக்தியாலியக்கி யாளவல்ல இவ்விருபதாம் நூற்றாண்டில்—கடவுள் சக்தியைப்பற்றிக் கூறுவதென்றால் சிலருக்கு வியப்பாகத் தானிருக்கும்! என்னை! காலவேகமென்னும் கடுஞ்சுழற்காற்றிலே மக்களின் பழமையுணர்வென்னும் பக்குவமான எண்ணங்கள் பறந்து போவதும் இயற்கை யன்றோ?

கடவுள் என்றால் என்ன? அவன்யாண்டுளன்? எவ்வடிவினன்? எவ்வியல்பினன்? எவ்வாறு அவனையாம் காணமுடியும்? கடவுளுக்கும், நமக்குமுள்ள சம்பந்தங்களென்ன? என்பனபோன்ற கேள்விகள் ஒவ்வொருவர் மனதிலு முதித்துச் சந்தேக விபரீதங்களை உண்டு பண்ணுவது இயற்கையே? ஆதலின் இக்கேள்விகளுக்கேற்ற உண்மைக்காரணங்களை, நூலுணர்வாலும், அனுபவ உணர்வாலும் உய்த்துணர்ந்து பார்த்து உண்மையை விளக்குதல் இன்றைய உலகிற்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

புறத்தோற்றத்தால் காணமுடியாத ஒரு பொருளின் சக்தியை அகத்தோற்றத்தால் கண்டுதெளிதல் வேண்டும். இப்புறவகத்தோற்றங்களைக் கண்டு தெளிய, பிரத்தியட்க்ஷம், ஆகமம், அனுமானம் என்ற பிரமாண விளக்கங்களை நம் முன்னோர் கண்டுரைத்திருக்கின்றனர். கண்கள் நேரளவில் பார்ப்பதைப் பிரத்தியட்க்ஷமென்றும், நூல்களிற் கூறப்படும் கருத்துக்களைக்கொண்டு தெளிவடைவதை ஆகமம் என்றும், தெரியப்படும் குறியைக் கொண்டு தெரியக்கிடைக்காத ஓர் பொருளின் நிலையைத் தீர்மானித்துணருதல், அனுமானம் என்றும், சொல்லப்படும். இவ்வனுமானப் பிரமாண உணர்வினால் நாம் கடவுளின் சக்தியைக்கண்டு தெளிதல் முடியும்.



உதாரணமாக, ஓர் வீட்டின் வெளிப்புறத்தில் தோற்றப்படும் புகையைக்கொண்டு அவ்வீட்டினுள் நெருப்பெரிகின்றதாக உணர்கிறோம். அதாவது காணப்படும் புகையைக்கொண்டு காணப்படாத நெருப்பின்சக்தியை அனுமான அளவையால் அறிய முடிகின்றது. இவ்வாறே, உலக இயக்கத்திற்குக் காரணமான, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூத அம்சங்களில், நிலம் நீர் நெருப்பு, என்ற மூன்றையும் பிரத்தியட்சமாகக்காண்கின்றோம். காற்று ஆகாயம் என்பவைகளைக் காணமுடியாதிருப்பினும், அவைகளின் சலன—யியக்க சக்திகளைக்கொண்டு—"உண்டு"—என்ற துணிபை யாம் அடைகின்றோம். இதனை யொப்ப இவ் உலகயியக்கத்தைக் கொண்டு கடவுள் சக்தியை உணர்ந்தறிதல்வேண்டும்,

கடவுள் சக்தியின் உண்மையைக் கண்டுணரச் சுற்றியுள்ள இயற்கை நிலையே போதுமானது. இயற்கையே கடவுள்வடிவம். இயற்கையின்—உயிரினங்களின்—இயக்கங்களே. கடவுளின் சக்தியை நினைவூட்டு வனவாகும்-வெங்கதிரவனின் வெப்பம்—தண்மதியின் தட்பம்-அலைகள் புரளுங்கடல்கள் எழிலை விளக்கும் மலைகள் மணியைக் கொழிக்கும் அருவிகள் செழுமை சூழ்ந்த பொழில்கள் இவைகளைத் தன்னகங் கொண்ட இவ்வுலகம்! இவ்வுலகில் நடமாடும் பல்வேறு உயிரினம் ஆகிய இவைகளின் தோற்றவியக்கங்களுக்கு ஓர் முழுமுதற் சக்தி யிருக்கவேண்டுமல்லவா? அச்சக்தியின் துணைகொண்டல்லது இவைகள் நின்றுநிலவ முடியாதன்றோ. அம்மாபெரும் சக்தியையே "கடவுள் சக்தி" என்கின்றோம்.

உலக இயக்கத்திற்குக் காரணமான ஓர் சக்தியைக் "கடவுள்" என்று சொல்லக் காரணம் என்னை? கடவுள் என்பதைப் பிரிக்க கட + வுள் = என்பதாகின்றது. கடம்—தேகம் வுள்—தேகி; அதாவது, தேகத்திற்குள்ளிருக்கும் ஆத்மா (உயிர்) என்றாகின்றது. கடமான சரீரம் ஸ்தூலம் சூட்சுமம் காரணம் என மூன்றாகும். அவற்றுள், விழிப்பில் காண்பது ஸ்தூலம்; சொப்பனத்தில் காண்பது சூட்சுமம்; தூக்கத்தில் காண்பது காரணம். ஆக மூன்று சரீரங்களுக்குள்ளுஞ் சாட்சிமாத்திரையாய் நின்று, இயக்கஞ் செய்வது, ஆத்மா (கடவுள்) என்ற சக்தியாகும். எனவே அனைத்துயிரும் கடவுள் சக்தி எனவும், அவ்வுயிர்கள் நின்ற உடல்களைக் கடவுள் உறையும் ஆலயங்களாகுமெனவும், நம்முன்னோர் உணர்ந்தனர். இதனை "ஆலயமே காயம் அறிவே சிவலிங்கம்". என்ற வாக்கியம் நன்கு வலியுறுத்தும்.

இத்தகைய உயர்நிலையான கடவுள்சக்தி, சர்வசக்திகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, நிற்கும் ஒரு அதிநுட்பமான பொருள். எங்கும் வியாபித்து, எல்லாவற்றையும் தனதுவியாபக சக்திக்குள் நிலைபெற நிறுத்தி, அவற்றினுள்ளும் தான்வியாப்பியமாய் நிற்கும் ஓர் பேரருட் சக்தி. இச்சக்தியையே கடவுள்—தெய்வம்—என்ற பெயரால் நாம் அழைக்கின்றோம்.

கடவுள், போக்கு-வரவு; வளர்வு-தேய்வு; இறப்பு—பிறப்பு; விருப்பு—வெறுப்பு; இன்பம்—துன்பம்; ஆகியவைகளில்லாதவனாகி, இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்றெழுதி எவராலுங் காட்டவொண்ணா அரும் பெரும் நிலையுடையவன். உருவாயும், அருவாயும் உருவருவற்ற தன்மையாயும், ஆணாயும், பெண்ணாயும் ஆண்பெண்ணற்றவோர் உருவாயுமிருக்கும் தன்மை அவனுக்குண்டு. அவனை, "குணமிலான், குறியிலான் குறைவிலான், கொடிதாம், புலமிலான், தனக்கெனப் பற்றிலான், பொருந்துமலமிலான், மனைவியிலான், சஞ்சலமிலான், விறகிற் றீயினன், பாலிற்படு நெய்போல் மறைய நின்றுளன். மாமணிச் சோதியான்". என அப்பர் பெருமான் அகங்கனிந்துரைத்துள்ளனர்.

இவ்வாறாகப் பற்றற்ற நிலையையுடைய கடவுள் தன்னிடத்தேயமைந்துள்ள இச்சை. கிரியை, ஞானம் என்ற முப்பெரும்சக்திகளால் உலகையாக்கி, யளித்து மறைக்க வல்ல காரியங்களைச் செய்கின்றான். தன்னுடைய கதிர்களால் உலகப்பொருள்களை விளக்கித்தான் யாதொன்றினும் பற்றில்லாது தன்னை விளக்கும் கதிரோன்போல, தன்மாயாசக்திகளால் உலகை நடத்தும் இறைவனும், தான்யாதொன்றினும் பற்றில்லாதவனாக விளங்குகின்றான். உலக மக்களாகிய நமக்கு இச்சாசக்தியால், உலகப்பொருள்களில் விருப்பத்தைக் கொடுத்துக் கிரியா சக்தியால் அவைகளையனுபவிக்கச் செய்து முடிவில் ஞானசக்தியால் நம் அறிவுக் கண்ணைத் திறந்து ஆட்கொள்ளுகின்றான். எனவே, அறிவுமாத்திரையாய் ஒன்றையும் அவாவாமல் நின்று தன் தாதான்மிய சக்தியால் உலகையியக்கும் பரம்பொருளின் தன்மையை, இதனால் நன்கறியலாகும்,



உலக தத்துவத்தின் அனாதிப்பொருள்கள் மூன்றாகும். இப்பொருள்களை. அத்வைத சித்தாந்திகள் ஜகம் ஜீவன் பரம் என்பார்கள். சைவசித்தாந்திகள், பதி, பசு, பாசம், என்பார்கள். வைணவர்கள் சித்து, அசித்து, ஈசுவரன் எனக்கூறுவர். இவற்றுள், பரம், பதி, ஈசுவரன் என்ற கடவுள் ஜீவன், பசு: சித்து என்ற உலகமக்களாகிய நம்மையும், உலகப் பொருள்களையும், ஜகம், பாசம், அசித்து, என்ற மாயாசக்திகளைக் கொண்டு, இயக்கி ஆளுகின்றான். பசுத்தன்மையுடைய மக்கள், பயனற்ற உலகவாழ்வின் பாசத்தினின்றும் நீங்கிப்பதியாகிய ஆண்டவனை யடைவதே, பெரும்பேறான மோக்ஷநிலை. இப்பெருநிலையை மக்கள் அடைவதற்காகவே, கடவுள், உலகை நடத்தி மக்களை உய்விக்க எண்ணுகின்றான்.

எல்லாஉயிர்களும் அநாதிகாலத்தில் ஆணவம், கன்மம், மாயை, என்ற மும்மலங்களால் கட்டுண்டு, அறிவுசெயலின்றி அடங்கிக் கிடந்தன. அன்புருவான ஆண்டவன் கருணையுள்ளஞ் சுரந்து. அவ்வுயிர்களைப் புல் முதலான பல் பிறப்புகளுக்குட் படுத்தி, முடிவில் மனித உருவைக் கொடுத்து, உலகில் வெளிவரச் செய்கின்றான். வெளிவரப்பெற்ற மக்கள் உலகவாழ்வி லின்பமடைய வேண்டி, தனுகரண புவன போகங்களையும் அறிவு செயலாற்றல்களையும் கொடுத்து, அனைத்திலும் பயனடையும்படி செய்கின்றான். அறிவற்ற மக்களின் அறியாமையை நீக்கித்தன் பேரன்பினால் அறிவு நிலையை விளக்கி, விடுதலை செய்வதே; ஆண்டவனின் குறிக்கோளாகும். சிந்நாள் பலபிணிச்சிற்றறிவினரான நாம் பயனடைய வேண்டி கடவுள் உலகைக் கொடுத்தான்: உடலைக்கொடுத்து உயிரையுங் கொடுத்தான். பின் உணர்வைக் கொடுத்து அறிவையுங் கொடுத்தான். இவ்வளவையுங் கொடுத்து நம்மையியக்கி யாளவல்ல பேரறிவும், பெருநிலையுமுடைய, அப்பெருஞ் சக்தியை—பரம்பொருளை, நாம் அறியவேண்டாமா? நம்முள்ளே நின்று, உணர்வாக்கவல்ல, ஒப்பற்ற கடவுளை மறந்து, நாம் எங்ஙனம் உயிர்வாழ முடியும்? முடியாதாகவே, அக்கடவுளை யறியவல்ல மார்க்கங்களை இனி அடுத்துவரும் கட்டுரையில் ஆராய்வோம்.

# செந்தமிழ்க் கண்ட செம்பொருள்.

வித்வான் அருட்கவி, ம. க. வேலாயுதம்பிள்ளை விழுப்புரம்

திருவளஞ் சிறந்த தென்னாடென்னும் நமது தமிழ்நாட்டிலே மிகத்தொன்று தொட்ட காலத்திலிருந்தே பலபெரியோர்கள் தோன்றிப் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்போடு பொலிகின்றனர். அத்தகு பெரியோர்களால் ஆய்ந்தறிந்து உலகினர் உய்வான் வேண்டி உணர்த்திய செம்பொருள் ஒன்று உண்டு, என்பது மக்களாய்ப் பிறந்தோர் எவரும் அறிந்ததொன்றாகும்.

அவ்வாறு அவ்வுயர்ந்தோரால் அறிவிக்கப்பெறும் செம்பொருள் உருவுடைய ஒன்றன்று. அருவமாய் உள்ளது. இவ்வாறு அணுவாய் அருவப்பொருளாயுள்ள செம்பொருளைச் சில்வாழ்நாட் பல்பிணியராய்ச் சிற்றறிவுடைய மக்கட்கு அறிவிப்பான் வேண்டித் தோன்றிய நூல்களையே மயக்கந் தீர்ந்த அறிஞர் மறையெனக் கூறுவர்.

அம்மறைகள் தாம் எவையெனின், திருக்குறள், திருமந்திரம், தேவார திருவாசகங்கள், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், சிவஞான போதம், அருணகிரிநாதர் திருப்புகழ், தாயுமானார் பாடல், குணங்குடியார் பாடல், திருவருட்பாத் திருமுறைகள் முதலியனவாம். இம்மறைகளில், இறையாகிய செம்பொருள் எது? அதன் பண்பெவை? அதனியல்பை மக்கள் உணர்தல் யாங்ஙனம்? என்று அறிஞர் பன்னூல்களில் பல்விடங்களில் கூறியவற்றிற் சில எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரசனையும் ஆசிரியனையும் கடவுளையும் இறையெனக் கூறுதல் மரபு. இறையென்பது குடிகள் அரசனுக்குச்செலுத்தும் வரிப்பணத்திற்கு ஒரு பெயராகலின் அவ்வரிப்பணத்தை வாங்கியுண்டு அக்குடிகளைக்காக்கும் அரசனுக்கு இறையெனப் பெயர் வழங்கிற்று. விடுத்த வினாவிற்கு விடுக்கும் விடைக்கு இறையென ஒரு பெயருண்மையின் மாணவர் ஐயந்தீர்த்துக்கொள்ளும் பொருட்டு வினாவும் வினாக்களுக்கெல்லாம் விடையிறுத்தலால் இறையிறுக்



கும் ஆசிரியரை இறை என்று அழைக்கப்பட்டது. இறையென்பது முதனிலைத் தொழிற் பெயராய் ஏவல் நிலையில் நின்று எங்கும் இறைந்து (பரந்து) தங்கியுள்ளது என்கின்ற காரணத்தால் தெய்வத்திற்கும் இறையென்னும் பெயர் உண்டாயிற்று.

இனி இறையென்னும் செம்பொருள் எங்கே தங்கியுள்ளது? எவ்வாறு தங்கியுள்ளது அதன் இயல்புகள் எவை? அவ்விறைக்கும் மக்கட்கும் உள்ள தொடர்பு யாது என்பவற்றை ஆராய்ந்து காண்பாம்.

காற்று, தீ, நீர், மண் என்கின்ற நான்கும் பிரிவின்றிக் கதம்பப்பொடிபோன்று எங்கும் நிறைந்து அணுமயமாய்க் கண்ணிற்குக் காணக்கூடாத நிலையில் வெளியாக விரிந்து நிற்கின்ற எல்லாவற்றிற்குங் காரணமாகிய ஒன்றையே முதற்பூதம் (பெரிது) என்று ஆன்றோர் கூறினார். இம்முதற் பூதத்தினின்று காற்றும், காற்றினின்று தீயும் தீயினின்று நீரும், நீரினின்று மண்ணும் தோன்றி ஐம்பூதங்களாயிற்று என்ப. இவை முக்காலங்களினுந் தோன்றி ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களை இயற்றும் ஆற்றல் பெற்றுள்ளன என்பதும் அறியக்கிடக்கின்றன.

ஆகாயம் என்பது வினைத்தொகைச் சொல். ஆயம் என்றால் கூட்டம் என்பது பொருளாதலின் ஆகிய ஆயம், ஆகின்ற ஆயம், ஆகும் ஆயம் எனப்பொருள் தோன்றிநிற்றல் விளங்கும்.

பொருள்யாதெனின், காற்றாகிய கூட்டம், கனலாகிய கூட்டம், நீராகிய கூட்டம், மண்ணாகிய கூட்டம், என்பனவாம். ஆகாயம் தொழிற்படும்போது இவை நிகழ்கின்றன. ஆதலால் இவ்வாகாயமின்றி உலகத்திற்கு முதலாகிய செம்பொருள் வேறொன்றின்றென்பதோர்க.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" எனக்கூறினார்.

"இல்நுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்" எனவும்.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே,,

என்றும் மணிவாசகனார் கூறிய திருவாசகத்தில், ஒரு வீட்டின் மேற் கூரையிலுள்ள பொத்தலின் வழியாக நுழைந்து தோன்றும் இரவியினது கதிர்களில் காணப்படுகின்ற சிறிய அணுப்பொருள்கள் போலவும், ஒலியாயும், ஒளியாயும் இவற்றின் காரணமாகிய ஆகாயமாயுமே இறை இருக்கின்ற நிலை கூறப்படுவதும் புலனாம்.

"பாருருவில் நீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமாய்ப் பரந்து நின்ற ஏருரு"
என்று நாலாயிரப்பிரபந்தமுங் கூறியதுணர்க.

இறையாகிய செம்பொருள் மக்களிடத்து அறிவு வடிவமாகவே அமைந்து இலங்குகின்றது. அறிவைத்தான் ஞானமென்பார்கள். அறிவொளியையே செம்பொருள் எனப் படுதலால் அவ்வறிவு தானும் மக்களிடத்ததாகலின் மக்கள் தேவர் நரகர் உயர்திணையெனப்பட்ட தோர்க. என்னையெனின் கூறுதும்.

"ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்"

என்று திருஞான சம்பந்தர் கூறினாராகலின், உலகத்தில் பிறந்த மக்களுள் ஐம்புலன்களை ஒரு புலனாகவும், நான்கு கரணங்களை ஒரு கரணமாயும், முக்குணங்களை ஒரு குணமாகவும் பிராணவாயு அபானவாயு ஆகிய இரண்டையும் ஒன்றாகவும் தமது ஆத்மானுபவப்பயிற்சியால் ஆக்கியோரைத் தேவர் எனவும், ஆன்றோர் விலக்கிய தீய ஒழுக்கங்களையே தமது தொழிலாகக் கொண்டோரை நரகர் எனவும் இவ்விரு தகுதியினர் போக எஞ்சியோரை மக்கள் என்றும் கூறப்பட்டன. இதனாற்றான் தேவர்க்குரிய புலவர் என்னும் பெயரால் கற்றோரை அழைக்கப்பட்டதென்பது புலனாம். மக்களில் முற்கூறிய தேவர் தம் உள்ளத்துக்காணப்படும் அறிவொளியே தெய்வ வடிவாகலின் கடவுளுக்குத் தேவசிகாமணி



என்னும் ஒரு பெயருண்மையும் ஓர்க. இதனால்தான் திருமூல நாயனார்.

"வானவர் என்றும் மனிதர் இவரென்றும்
தேனமர் கொன்றைச் சிவனரு ளல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை"

என்று மக்கட்கு ஐய நிகழாவாறு உறுதிப்படுத்திக் கூறினர். இவற்றையெல்லாம் உணர்வதும் அறிவேயாம். ஆதலின்........சிற்றறிவின் வாயிலாகப் பேரறிவை அறிவதே செம்பொருளை அறியும் நிலையாம். ஆதலாற்றான்

"சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே" என நால்வர் நன்மணி மாலையும்,

,,அறிவை யறிவது பொருளென அருளிய"

என அருணகிரிநாதர் திருப்புகழுங் கூறியதறிக.

"மாலற நேய மலிந்தவர் வேடத்தை அரனெனத்தகும்"

என்று சிவஞானபோதமுங் கூறிற்று. சுப்பிரமண்ய பாரதியாரும் "பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே அதனியல்பு ஒளியுறும் அறிவாம்" எனக்கூறிப்போயினர். இராமலிங்க அடிகளோ "காயமென்பதா காயமென்றறியேன்" எனவும் "வெளியாய் நிறைந்து விளங்கும் ஒன்றே கண்டவடிவாய் அகண்டமயமாய் எங்குங் கலந்து நின்ற பெருங் கருணைக்கடவுளே,, என்றும் கூறியதனால் தெரிகின்றதன்றோ?

இறைத் தன்மையானது வெளியிடத்து அணுமயமாகவும், மக்களிடத்து அறிவொளியாகவும் இருக்கின்றதென்பதையும், உயிர்கள் அனைத்தும் இறைத் தன்மையால் ஆக்கப்பட்டதெனவும் மேற்கூறிய நூற்சான்றுகளால் அறிந்தோம் ஆதலால் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற முதுமொழிப்படி எல்லாவுயிர்களையும் அன்பு பாராட்டி இரக்கங்காட்டுதலே அவ்விறையை வழிபடுமுறையாம் என்பதும் உண்மை ஆகாயம் என்பது அணுக்கூட்டம் எனவும் அவை முக்காலத்திலும் நிகழ்பவை எனவும் அவ்வணுக்களாற்றான் உலகம் ஆக்கப்பட்டதெனவும் அவ்வணுக்களைத்தான் இறையெனப் பட்டதெனவும் இதனைத்தான் எல்லா நூல்களுங் கூறிற்று எனவும் இவ்விறைத் தன்மையை அறிந்தோரே இறை என்பதும் நுண்ணுணர்வால் ஆராய்ந்து அவ்விறைத்தன்மையை அனைவரும் அறியவேண்டிய இன்றியமையாததென்பதும் கூறி இக்கட்டுரையை முடிப்பாம்.

# திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை.

நிகழும் விரோதி வருஷம் தைமீ 26ம்திகதி (8-2-50) புதன்கிழமை நடந்த பொது நிர்வாக சபைக்கூட்டத்தில், கீழ்க்கண்டவர்கள் புதுஆண்டு உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள். உபதலைவர்கள் திருவாளர்கள். க. கனகரத்தினம், சி. குமாரசுவாமி, க. வைத்தியநாதன், S. நடேசன், டக்றர் S. சுப்பிரமணியம், டக்றர் ச. இராஜேந்திரம், K. வி. சோ. சுந்தரம், S. R. M. வள்ளியப்பசெட்டியார், S. சொக்கலிங்கம் செட்டியார். கௌரவ C. சிற்றம்பலம்.

காரியதரிசி: திரு. சு. சிவசுப்பிரமணியம்,

உதவிக்காரியதரிசிகள்: திருவாளர்கள். A. சிற்றம்பலம், K. சிதம்பரப்பிள்ளை,

தனாதிகாரிகள்: திருவாளர்கள். S. சோமசுந்தரம், R. M. பழனியப்பசெட்டியார், P. S. துரையப்பா.

காரிய நிர்வாக சபை: திருவாளர்கள், K. மதியாபரணம், K. C. செல்வத்துரை, V. A. கந்தையா, க. இராமச்சந்திரன், வீ. சிவசுப்பிரமணியம், M. செல்வத்துரை, S. வேலாயுதன், C. K. இரத்தினம், சுப்பையா சரவணமுத்து, சின்னட்டியார் சரவணமுத்து, செ. சரவணமுத்து, வ. க. செல்லப்பா, டக்றர் S. அரியரத்தினம், A. பொன்னையா, A. கணபதிப்பிள்ளை, P. தம்பிமுத்து, C. இரகுநாதன், C. இராசையா, கா. பொ, இரத்தினம், C. M. சின்னையா, S. கந்தையா, A. R. மாணிக்கம் செட்டியார், S. அம்பலவாணர், A. கந்தையா, V. முருகேசு, S. கருணாநிதி, டக்றர் M. S. திருவிளங்கம், R. மகேந்திரா, C. T. நமசிவாயம், M. பெரியதம்பி, M. வயிரவப்பிள்ளை, V. P. N. சிங்கம், A. V. R. A. இராமநாதன் செட்டியார்.

சபைத்தர்மகர்த்தாக்கள்:

திருவாளர்கள்: சு: சிவபாதசுந்தரம், க. கனகரத்தினம், க. வைத்தியநாதன், சு. சிவசுப்பிரமணியம், ச. சோமசுந்தரம், P. S. துரையப்பா, R. M. பழனியப்ப செட்டியார், K. மதியாபரணம், க. இராமச்சந்திரன்



# திருக்கேதீஸ்வர யாத்திரை.

இலங்கை ஆத்மீகத் துறையில் முன்னேறியுள்ளது என்பதற்கு விசேடமொன்றுமில்லாத நாளில் (11-2-50) ஆயிரக்கணக்கான அன்பர்கள் திருக்கேதீஸ்வரத்தில் ஒன்று கூடியமையே பிரதான அத்தாட்சியாகும். இந்த யாத்திரைக்காக விசேட புகையிரத வசதி செய்து யாத்திரீகர்ளுக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் அளித்த இலங்கைப்போக்குவரவு மந்திரிக்கும் அவரது உத்தியோகத்தர்களுக்கும் சைவ உலகு என்றும் கடைமைப்பட்டுளது.

திருக்கேதீஸ்வர யாத்திரைக்கான விசேட புகையிரதம் 11-2-50 சனிக்கிழமை காலை 6மணிக்கு மன்னார்ப்புகையிரத ஸ்தானத்தை யடைந்தது. பக்தர்கள் கூட்டம் அரோகராச்சத்தத்துடன் மேடையில் இறங்கினர். மேடை மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடையில் நின்றபடியே அன்பர்கள் 15 நிமிஷ நேரம் கேதீஸ்வர நாதன் புகழைப்பாடினர். பின் "வஸ்" மூலம் அன்பர்கள் கோயிலைச்சேர்ந்தனர்.

அன்பர்கள் யாவரும் அதிகாலையில் ஆனந்தமாகப் பாலாவித் தீர்த்தத்தில் நீராடினர். காலை $9\frac{1}{2}$ மணிக்கு ஆடம்பரமற்ற முறையில் விசேடஅபிஷேகம் நடைபெற்றது. உச்சிக்காலப்பூசையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் பங்குபற்றினர். இவர்கள் எல்லோரையும் வரவேற்று உணவளித்த சிவநேசன் எஸ். கந்தசாமிஅவர்கட்குச்சைவஉலகு என்றும்கடமைப்பட்டுள்ளது. அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் கேதீச்சரநாதன் அருள்கிடைப்பதாக.

சாயந்தரம் க. இராமச்சந்திரன்அவர்கள் தலைமையில் ஓர்கூட்டம்கூடியது. செல்வி ராமச்சந்திராவும் வேறு அன்பர்களிற்சிலரும் பக்திப்பாடல்கள் பாடினர். அத்தருணம் திருவாளர்கள் வ. க. செல்லப்பா, சி. சரவணமுத்து, மு இரகுநாதன், பண்டிதர் மு. ஆறுமுகம், மன்னார் அதிகாரம் முதலியார் அப்துல் காசீம் மரைக்காயர், மந்திரி கௌரவ சி. சிற்றம்பலம்அவர்கள் ஆதியோர்பேசினர். பேச்சாளர்கள் தமது பேச்சில் திருக்கேதீச்சரத்தின் பெருமைபற்றியும், பழைமை பற்றியும் சைவமக்கள் கடமைபற்றியும் 20லட்சம் ரூபாயில்திருப்பணிவேலைசெய்தல் அவசியந்தானா என்பதுபற்றியும் தகுந்த ஆதாரங்களுடன் பேசினர்.

திரு டக்டர் சந்திராகுணரட்ணஅவர்கட்கும் போக்குவரத்து மந்திரிக்கந்தோர் அலுவலாளர்கட்கும் நன்றிகூறப்பட்டது.

இரவு 8மணியளவில் கேதீச்சரநாதன் கௌரியம்மாள் சமேதராகஎழுந்தருளி வீதிவலம்வந்த காட்சி பக்தர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓர் புத்துணர்ச்சியை ஊட்டியது.

கேதீஸ்வரநாதன் சன்னிதியில் 15-2-50 புதன்கிழமை சிவராத்திரிதினக்கொண்டாட்டம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தயாத்திரைப்புகைரதம் புறப்படுமுன் கோட்டை ஸ்ரேசனில் கற்பூர ஆராதனையுடன் திருக்கேதீச்சரத்தேவாரமும் பாடப்பெற்றது. ஞாயிறுகாலை அப்புகைரதம் கொழும்புக்கோட்டைஸ்டேசனுக்கு வந்ததும்; யாத்திரீகர்கள் அமைதியாக இறங்கி ஓர் இடத்தில் கற்பூரத்தீபத்தைச்சுற்றிநிற்க, தேவாரம்பாடப்பெற்றது திரு. க. இராமச்சந்திரனல் போக்குவரத்துமந்திரியாருக்கும் அவரின் சார்பாக அருந்தொண்டாற்றிய டக்ரர் சந்திரா குணரத்ன அவர்கட்கும், மிகவும் வசதியான முறையில் ஒழுங்குகள் செய்த றெயில்வே தலைவருக்கும் அவரின் பிரதிநிதிகளாகக் கூடிச்சென்று திரும்பிய திருவாளர்கள் A. B. டெம்மர் J. லோஸ் முதலாய உத்தியோகர்கட்கும் நன்றி கூறப்பட்டது. திரு டெம்மர் இந்த யாத்திரையில் தாம் கண்ட காட்சியை உணர்ச்சியுடன் பேசியபின். டக்ரர் சந்திரா குணரத்தின சில குறிப்புகளை எடுத்துரைத்தனர். தம்முன் நிற்போர் தங்களை யாத்திரிகர்களாக மாத்திரம் கருதாமல். திருக்கேதீச்சரப் பிரசாரகர்களாகவும் கருதித் தொண்டாற்றவேண்டுமென அவர்கேட்டபோது எல்லோரும் ஆனந்த பரவசமுற்றனர்.

---

கேகாலையில் இரண்டாம்முறை பிரசாரக்கூட்டம்.

இரண்டு வாரங்கட்கு முன் கேகாலையில் இத்திருப்பணிச் சபைக்கு ஆதரவளிக்க; அன்பர்கள் வி. எஸ். துரையப்பா N. A. L. நல்லியப்ப செட்டியார் கறுப்பையா அம்பலம் மூவரின் முயற்சியால் ஓர் பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. திரு. T. குணரத்தினம் (என்சினியர்) தலைமை வகித்தனர். கொழும்பிலிருந்து சென்ற திருவாளர்கள். சு. சரவணமுத்து. C. குமாரசூரியர் A. கணபதிப்பிள்ளை சு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் திருக்கேதீச்சர புனருத்தாரணம் குறித்துப்பேசினர்.



திருப்பணி நிதி.

| | |
|---|---|
| சென்ற வெளியீட்டின்படி | 73134-00 |
| திரு. K. கனகராசா அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| ,, M. கந்தையா அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| ,, S. K. சங்கரப்பிள்ளை அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| ,, A. E. சங்கரப்பிள்ளை அவர்களும் பாரியாரும் | 1001-00 |
| ,, K. சிவகுரு அவர்களும் புத்திரர்களும் | 1001-00 |
| மொத்தம்: | 78139-00 |

இவற்றை விட முன்னரேயே ரூபா 1001/- நன்கொடையளித்த திரு. செ. தியாகலிங்கம் அவர்கள் தற்போது நிகழும் செலவுக்காக ரூபா 1000/- கொடுத்துதவியிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

---

## செய்தித்திரட்டு.

களுத்துறையில் அன்பர் திரு. மூ. சு. திருவிளங்கம் அவர்களால் 13-1-50 ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப்பிரார்த்தனை மாசமொருமுறை கடைசி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும். 10-2-50 நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் K. V. S. சுந்தரம் K. P. ஹரன் கலந்துகொண்டனர். இப்போ ஓர் ஆலயம் நிறுவக்கூடிய வசதிகள் இல்லாமையால் ஓர் பஜனை மண்டபம் நிறுவுவதற்கு அபிமானிகள் முன் வந்துள்ளனரென அறிகின்றோம்.

## காந்திஜீ சிரார்த்ததினம்.

30-1-50 திங்கட்கிழமை குருகலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையிலும் மேற்படி தினம் மிக உயரிய முறையில் கொண்டாடப்பட்டமையறிந்து மகிழ்கிறோம்.

வாசிகசாலைத் திறப்புவிழா.

தெல்லிப்பழை பாலர் ஞானவைரவச் சபையின் சார்பாக வாசிகசாலை ஒன்று காசிவிநாயகர் ஆலயத்தில் தைமீ 16ம் தேதி திறக்கப்பட்டதாக அறிகிறோம்.

—ஆத்மஜோதி ஆயுள்சந்தா ஆதரவாளர் —

37-திரு. அ. சபாரத்தினம் C. G. R. கொழும்பு.

## *K. S. K. Vaitialingam Pillai & Co.,*

JEYALUXMI STORES
Jewellers and textile merchants
8 , TRINCOMALEE STREET, KANDY.

பெண்கள் விரும்பும் நூதன கலர்களிலும் பாடர்களி லும் உள்ள பெங்களூர் காஞ்சிவரம். கும்பகோணம் பெனாறிஸ், காஷ்மீர், பட்டுச்சேலைகளும் மற்றும் நூல் சேலைகள், வேஷ்டிகள். சரிகை துப்பட்டாக்கள், அங்க வஸ்திரங்கள், எங்களிடம் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

உத்தரவாதமுள்ள பவுன் நகைகள் ஆடர்படி குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

### உங்கள் வரவை எதிர்பார்க்கிறோம்.


---

## குங்குமம்.

மாதாந்த மாதரின் வெளியீடு
ஒரு வருட சந்தா 6 ரூபா
2 வருடங்களுக்கு 11 ரூபா
ஆயுட் சந்தா 100 ரூபா

ஆசிரியை—மு. விசாலாட்சி அம்மாள்
முரளி
பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு, மதராஸ் 10.


கௌரவ ஆசிரியர்; க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர் நா முத்தையா, ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன]
நாவலப்பிட்டி சரவணபிரஸில் பதிப்பித்தது. [12-2-50]